பன்னோக்குப் பார்வையில்

# தமிழ்மொழியும் இலக்கியமும்

தொகுதி – III




பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. முருகேசன்

முனைவர் மா. சிதம்பரம்

முனைவர் சு. குமரன்

முனைவர் சு. இராமலிங்கம்

முனைவர் சந்திரிகா

முனைவர் த. பிரியா

# பன்னோக்குப் பார்வையில்
# தமிழ்மொழியும் இலக்கியமும்

## (பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)

**தொகுதி - III**


பதிப்பாசிரியர்கள்

**முனைவர் க. முருகேசன்**
**முனைவர் மா. சிதம்பரம்**
**முனைவர் சு. குமரன்**
**முனைவர் சு. இராமலிங்கம்**
**முனைவர் சந்திரிகா**
**முனைவர் த. பிரியா**



**தமிழ்த்துறை**

**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**

**(தன்னாட்சி)**

தேசிய மதிப்பீடு, மீள் தர நிர்ணயக் குழுவின் 'A' தகுதி பெற்றது

தனிச்சிறப்புத் திறன் கல்லூரித் தகுதி பெற்றது

**ஞானாம்பிகை நூற்பாலை (அஞ்சல்), கோயம்புத்தூர் – 641 029**

**போன் : 0422 – 2642095**

E-mail : info@kongunaducollege.ac.in Website : www.kongunaducollege.ac.in

# பன்னோக்குப் பார்வையில் தமிழ்மொழியும் இலக்கியமும்

(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் க. முருகேசன்**<br>**முனைவர் மா. சிதம்பரம்**<br>**முனைவர் சு. குமரன்**<br>**முனைவர் சு. இராமலிங்கம்**<br>**முனைவர் சந்திரிகா**<br>**முனைவர் த. பிரியா** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | ஜூலை, 2019 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை**<br>**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**<br>கோயம்புத்தூர் – 641029. |
| கணினி | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் – 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்,<br>476, பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் – 29.<br>அலைபேசி : 9843273994,7092092066 |
| பக்கங்கள் | : | XXII + 410 = 432 |
| விலை | : | உரூ. 400/- |

**ISBN : 978 - 93 - 80800 - 57 - 8**


## International Conference on Heterogeneous Perspectives in Tamil Language and Literature


| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. K. Murugesan. Dr. M. Chidambaram**<br>**Dr. S. Kumaran. Dr. S. Ramalingam.**<br>**Dr. Chandrika. Dr. D. Priya** |
| Copyright's | : | Editors |
| First Edition | : | July, 2019 |
| Published | : | **Department of Tamil**<br>**Kongunadu Arts and Science College**<br>Coimbatore - 641 029. |
| Computer | : | **Prdag Print**, Coimbatore - 29. |
| Printing at | : | **Prdag Print**<br>476, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 9843273994, 7092092066 |
| Pages | : | XXII + 410 = 432 |
| Prize | : | **Rs. 400/-** |

# 228. திருநாவுக்கரசு நாயனார் புராணக் கட்டமைப்பு

**கலாநிதி சுகந்தினி சிறிமுரளிதரன்**
*தலைவர், இந்து நாகரிகத்துறை*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*
*யாழ்ப்பாணம்.*

## அறிமுகம்

தெய்வப்புலவர் சேக்கிழார் இயற்றிய செம்பொருட் காப்பியமே பெரியபுராணம் என வழங்கும் திருத்தொண்டர் புராணம் ஆகும். செயற்கரிய செயல்களைச் செய்த அருளாளர்களின் வாழ்க்கை வரலாற்றினை இந்நூல் விபரிக்கின்றது. இந்நூலில் புகழப்படுகின்ற அடியவர்கள் குரு லிங்க சங்கம வழிபாட்டில் ஈடுபட்டவர்கள் ஆவர். உள்ளத்தாலும், உணர்வாலும் சொல்லாலும், செயலாலும் தூய்மை கொண்ட சிவனடியார்களின் வரலாற்றை மக்கள் அறிந்து அவர்கள் வாழ்ந்துகாட்டிய நற்பண்பாட்டு விழுமியங்களைப் பின்பற்றுவதன் வாயிலாகத் தாமும் சமுதாயத்திற்குப் பெரும் பணியாற்றமுடியும் என்ற குறிக்கோளுடன் பெரியபுராணம் எனும் காப்பியத்தை சேக்கிழார் வழங்கினார்.

## பெரியபுராணத்திற்குரிய மூலங்கள்.

சைவ இலக்கிய மரபில் கி.பி எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனார் இயற்றிய திருத்தொண்டர் தொகையை தொகை நூலாகவும், கி.பி பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பி இயற்றிய திருத்தொண்டர் திருவந்தாதியை வகை நூலாகவும் கொண்டே கி.பி பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சேக்கிழார் பெரியபுராணத்தை விரிநூலாக அமைத்துள்ளார். இம்மூன்று நூலும் திருவருள் வழிநூலாய் நிற்பதும், தனித்தமிழ் முதல் நூலாய் நிற்பதும் போற்றுதற்குரியது. மேலும், பெரியபுராணத்தை அம்பலவாணர் அடியெடுத்துக் கொடுத்தும், உண்ணின்றுணர்த்தியும், காட்டியருள அத்திருவருளோடு அத்துவிதமாய் நின்று ஞானக் கண்ணாலே கண்டிறிந்தபடி தாமற்ற நிலையில் ஆசிரியர் பாடியுள்ளார் என்பதனை 'யானறிந்தபடி பகர்ந்தேன்' (திருநாவுக்கரசு நாயனார் புராணம், பா.எ 429) எனும் திருநாவுக்கரசு நாயனார் புராண இறுதிப்பாடலின் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

## திருநாவுக்கரசு நாயனார் புராணத்தின் இருப்பிடம்

பெரியபுராணக் காப்பியம் திருமலைசருக்கம் முதல் திருநின்ற சருக்கம் முடிய முதற்காண்டமாகவும், வம்பறாவரிவண்டுச் சருக்கம்

முதல் வெள்ளானைச் சருக்கம் முடிய இரண்டாம் காண்டமாகவும் நின்று இலங்குகின்றது. இந்நூலை இருகாண்டங்களாகவும், பதின்மூன்று சருக்கங்களாகவும், எழுபத்தெட்டு புராண உட்பகுப்புக்களையும், நாலாயிரத்து இருநூற்று ஐம்பத்து மூன்று (பாடல்களின் எண்ணிக்கை நாலாயிரத்து இருநூற்று எண்பத்தாறு என்ற கருத்தும் உண்டு. பிற்காலத்தில் இடைச்செருகல்களாக முப்பத்தி மூன்றுபாடல்கள் புகுத்தப்பட்டன என சி.கே.சுப்பிரமணிய முதலியார் எழுதிய சேக்கிழார் என்னும் நூலில் விளக்கப்பட்டுள்ளது.) திருவிருத்தங்களையும் கொண்டதாக சேக்கிழார் கட்டமைத்துள்ளார். இக்காப்பியத்தினுள் தமிழ் நாட்டில் பல்வேறு இடங்களில் வெவ்வேறு காலங்களில் பலதரப்பட்ட குலங்களை, இனங்களைச் சார்ந்த தனியடியார் அறுபத்து மூவரும், தொகையடியார் ஒன்பதின்மரும் ஆகிய திருத்தொண்டர் எழுபத்திருவருடைய வரலாறும், மகிமையும் தெளிவுறக் கூறப்பட்டுள்ளது.

இதில் திருநின்றசருக்கத்தில் 429 விருத்தப்பாக்களால் திருநாவுக்கரசுநாயனார் புராணம் அமைந்துள்ளது. திருஞானசம்பந்தர் புராணம் 1256 விருத்தப்பாக்களைக் கொண்டு விளங்கி பெரியபுராணத்திலுள்ள மொத்தப் பாடல்களில் 29.3% இனைப் பெற்று 1வது இடத்தினையும், திருநாவுக்கரசுநாயனார் புராணம் 429 விருத்தப்பாக்களைக் கொண்டு மொத்தப் பாடல்களில் 10% யினைப் பெற்று 2வது இடத்தினையும் பெற்றுள்ளமை இங்கு சிந்திக்கத்தக்கது.

## திருநாவுக்கரசுநாயனார் புராண நடைச்சிறப்பு

சேக்கிழார் செய்யுள் நடையைக் கையாண்டுள்ளார். இச்செய்யுள் நடைமிகச் செம்பாகமானது. கடினமான சொற்கள் இடம்பெறவில்லை. பாட்டின் போக்கும் சீராக அமைகின்றது. பொருள் செய்யும் போது பாட்டில் ஒரு இடத்திலுள்ள சொற்களை வேறிடத்திற்கு கொண்டு சேர்த்துப் பொருள் செய்ய வேண்டிய அவசியம் திருநாவுக்கரசுநாயனார் புராணப் பாடல்களில் காண்பது மிக அரிது. கதைசொல்வது போல் பாட்டுக்களாலே அழகாகச் சொல்லிக் கொண்டு செல்லும் பாங்கு சிறப்பானது. சேக்கிழார் காப்பிய கவிஞர்கள் பாடிய எண் சுவையை விடுத்துப் பக்திச் சுவையைப் பெரிதுபடுத்திப் பாடிவெற்றி கண்டுள்ளார்.

## திருநாவுக்கரசுநாயனார் புராணம் - பெயர்க்காரணம்.

திருநாவுக்கரசருக்கு வாகீசர், மருணீக்கியார், தருமசேனர், உழவாரப்படையாளி, திருத்தாண்டக வேந்தர், அப்பர் எனப் பெயர்கள் இருந்தாலும் திருநாவுக்கரசு எனும் திருப்பெயரே முழுமுதற் கடவுளான சிவபெருமானால் அளிக்கப்பெற்ற பெரும் சிறப்புடையது. ஆதலால் தான் சேக்கிழார் இதனை திருநாவுக்கரசு நாயனார் புராணம் என அமைத்திருக்கலாம்.

*'பாவுற் றலர் செந் தமிழின் சொல்வளப்*
*பதிகத் தொடைபாடியபான் மையினால்*

*நாவுக்கரசென் றுலகேழினுநின்*
*னன்னாமநயப் புறநண்ணுக'*
*(திருநாவுக்கரசுநாயனார் புராணம், பா.எ 074)*

மேலும், திருநாவுக்கரசு எனும் திருப்பெயரையே அப்பூதிநாயானார் எழுதியும், கூறியும் தம்மக்களுக்கு அப்புனிதப் பெயர் சூட்டியும், ஏனையவற்றிற்கும் அப்பெயரையே வைத்தும் இறை திருவடி சேர்ந்தார் என்பதனாலும், திருநாவுக்கரசு நாயனார் புராணம் எனப்பெயர் வைத்துள்ளமை சாலப் பொருத்தமாகும்.

## கட்டமைப்பு

புலவன் பாடற்பொருளைக் காப்பியத்தில் அமைத்துள்ள முறையே காப்பியக் கட்டமைப்பு என்று கூறலாம். திருநாவுக்கரசரது வரலாற்றுச் செய்திகளுக்கு ஊடாக இந்துசமயத்தின் பெருமையை உலகறியச் செய்வதே சேக்கிழாரின் நோக்கமாக இருந்துள்ளது என்பதனை இப்புராணத்தின் ஊடாக அறிந்து கொள்ள முடிகின்றது. எனவே திருநாவுக்கரசரைக் கருவியாகக் கொண்டு தளர்ந்திருந்த தமிழ் மக்கள் வாழ்க்கையில் ஒரு குறிக்கோளுடன் வாழுமாறு செய்துள்ளார். அதற்கு அமைவாக புராணக் கட்டமைப்பை அமைத்துள்ளார். திருநாவுக்கரசு நாயனார் புராணம் நாட்டு நகர வர்ணனையோடு தொடங்கி திருநாவுக்கரசரது குலப்பெருமையைக் கூறி அதன் பிறகே பக்தித் தளத்திற்கு வந்து இறைவனது பெருமையைக் கூறி இப்புராணம் அழகுறக் கட்டமைக்கப்பட்டுள்ளது.

திருநாவுக்கரசுநாயனார் புராணக் கட்டமைப்பைப் பிரதான மூன்று தளங்களாக வகுத்துப் பார்க்கலாம்.

| இல | கட்டமைப்பு | விபரம் | பாடல் தொகுதி |
|---|---|---|---|
| 01 | 1வது கட்டமைப்பு | பெற்றோருடனானவாழ்க்கை | பாடல் 1 - 36 |
| 02 | 2வது கட்டமைப்பு | சமணசமயத்துடன் தனது இளமைப் பருவத்தைக் கழித்தலும்,சமணத்திலிருந்து இந்துசமயத்திற்கு | பாடல் 37 – 146. |
| 03 | 3வது கட்டமைப்பு | தலயாத்திரைகளின் மூலம் இந்துசமயத்தின் பெருமையைஉலகறியச் செய்தல். | பாடல் 147 – 429. |

## 1வது கட்டமைப்பு.

முதலாவது கட்டமைப்பு திருநாவுக்கரசரது அறிமுகத்தில் தொடங்கி நிலையாமையை உணரும் வரையிலான எல்லைகளைக் கொண்டது. 1வது கட்டமைப்பை மேலும் மூன்று உப கட்டமைப்புக்களாக வகுத்து நோக்கலாம்.

| இல | உப கட்டமைப்பு | விபரம் | பாடல் தொகுதி |
|---|---|---|---|
| 01 | 1வது உப கட்டமைப்பு | நாட்டுநகரவர்ணனை. | பாடல் 1 - 15 |
| 02 | 2வது உப கட்டமைப்பு | பிறப்புச் சூழலைவர்ணிப்பதனூடாகவாழ்வியல் நெறிகளைவெளிப்படுத்துதல். | பாடல் 16 – 34. |
| 03 | 3வது உப கட்டமைப்பு | பிரிவுச்சூழலால் ஏற்பட்டவாழ்க்கைநிலையாமைஉணர்வு. | பாடல் 35 – 36. |

## 2ம் கட்டமைப்பு.

இரண்டாவது கட்டமைப்பு மருணீக்கியார் தருமசேனரான அறிமுகத்தில் தொடங்கி தருமசேனர் திருநாவுக்கரசர் ஆகியது வரையிலான எல்லைகளைக் கொண்டது. 2வது கட்டமைப்பு மூன்று உப கட்டமைப்புக்களாக வகுத்துநோக்கலாம்.

| இல | உப கட்டமைப்பு | விபரம் | பாடல் தொகுதி |
|---|---|---|---|
| 01 | 1வது உப கட்டமைப்பு | சமணசமயத்துடன் தனது இளமைப்பருவத்தைக் கழித்தல | பாடல் 37 - 40 |
| 02 | 2வது உப கட்டமைப்பு | திலகவாதியாரதுசமயச்செயற்பாடுகள். | பாடல் 41 – 61. |
| 03 | 3வது உப கட்டமைப்பு | சமணத்திலிருந்துசைவத்திற்குமீட்சிபெறல். | பாடல் 61 – 146. |

## 3வது கட்டமைப்பு.

மூன்றாவது கட்டமைப்பு தலயாத்திரை செல்வதில் ஆரம்பித்து சைவ சமயத்தின் பெருமையை உலகறியச் செய்வதுடன்

| இல | உப கட்டமைப்பு | விபரம் | பாடல் தொகுதி |
|---|---|---|---|
| 01 | 1வது உப கட்டமைப்பு | தலயாத்திரைகள் மூலம் மூர்த்தி,தல,தீர்த்த மகிமைகளைவிளக்குதல் | பாடல்கள் 147 - 429 |
| 02 | 2வது உப கட்டமைப்பு | உழவாரப்பணி | |
| 03 | 3வது உப கட்டமைப்பு | சமகாலத்துஅடியார்களின் சந்திப்பு. | |
| 04 | 4வது உப கட்டமைப்பு | அற்புதங்கள். | |

திருநாவுக்கரசுநாயனார் புராணத்தினை நிறைவுபெறச் செய்கின்றார். 3வது கட்டமைப்பை 04 உப கட்டமைப்புக்களாக வகுத்து நோக்கலாம்.

## நிறைவாக

சைவநெறியினை ஒரு நிறுவப்பட்ட சமயமாகவே அன்றி உலகம் தழுவிய சமயநெறியாக்குவது சேக்கிழாரின் விருப்பமாகும் என்பதற்குப் பெரியபுராணத்தில் பதினாறு இடங்களில் 'உலகெலாம்' என வருகின்றது. அதில் ஒரு இடமாக திருநாவுக்கரசுநாயனார் புராணத்தில் 371 வது பாடல் இடம்பெறுவது பெரியபுராணத்தில் திருநாவுக்கரசு நாயனார் புராணத்தின் வகிபாகத்தினை எடுத்துக் காட்டுகின்றது. சொல் புதிது, பொருள் புதிது, சுவைபுதிது என்று பாரதியார் பாடியதற்கு இலக்கணமாக விளங்குகின்ற திருநாவுக்கரசு நாயனார் புராணமானது 429 பாடல்களைக்கொண்டு விளங்குகின்றது. திருநாவுக்கரசரைக் கருவியாகக் கொண்டு தளர்ந்திருந்த தமிழ் மக்கள் வாழ்க்கையை ஒரு குறிக்கோளுடன் வாழுமாறு செய்துள்ளார் சேக்கிழார். மேலும், எத்தனை துன்பம் வந்தாலும் மனம் தளராது குறிக்கோளில் இருந்து விலகாது இலட்சியத்தை நோக்கிமுன்னேற வேண்டும் என்பதனை திருநாவுக்கரசு நாயானர் புராணம் உணர்த்தி நிற்கின்றது. இப்புராணத்தினை 3 கட்டமைப்புக்களாகவும், 13 உப கட்டமைப்புக்களாகவும் பகுத்து நோக்கமுடிகின்றது. திருநாவுக்கரசர் எனும் பாத்திரத்தின் ஊடாகச் சொல்லப்பட்டுள்ள சிறந்த வாழ்வியல் சிந்தனைகள் சைவத் தமிழரின் வாழ்வியலில் இடம் பெறவேண்டியது காலத்தின் தேவை ஆகும்.

## உசாவியவை


01. சுப்பிரமணிய முதலியார் C.K (உரையாசிரியர்), 1943 **பெரியபுராணம் எனும் திருத்தொண்டர் புராணம். 3ம் பகுதி முதற்பாகம்.**, கோவைத் தமிழ்ச்சங்கம். கோயமுத்தூர்.

02. சுப்பிரமணிய முதலியார் C.K 1933, **சேக்கிழார்,** சென்னை.

03. ஞானசம்பந்தன், m.r., 1999. **பெரியபுராணம் ஓர் ஆய்வு.** கங்கை புத்தக நிலையம், சென்னை.